# சிலுவைப் பாதை



எங்கே சுமந்து போறீர்? சிலுவையை நீர் எங்கே சுமந்து போறீர்
பொங்கும் பகைவராலே, அங்கம் நடு நடுங்க எங்கே போறீர்

1. மனித பாவத்தாலே, மரணத்தீர்வை பெற்று
தூய செம்மறிபோலே, துக்கத்துடன் வருந்தி எங்கே போறீர்

2. பாரச்சிலுவை மரம், பாவத்தின் சுமை தாங்கி
பாசத்துடன் அணைத்து, பாரத்துடன் நடந்து எங்கே போறீர்

3. கல்வாரி மலை நாடி, தள்ளாடி தரை வீழ்ந்து
எல்லோரின் பாவங்களை, தனிமையால் சுமந்து எங்கே போறீர்

4. மாமரி கன்னி அன்னை, மகனின் கோலங்கண்டு
மாதுயருடன் வாடி, மனம் நொந்து வருந்த எங்கே போறீர்

5. உதிரம் ஆறாய் சிந்தி, உள்ள உரமிழந்து
சீரேன் சீமோன் துணையை, ஏற்று வழி நடந்து எங்கே போறீர்

6. கர்த்தரே உம் வதனம், இரத்தக் கறையால் மங்கி
உத்தமி வெராணிக்காள், வெண் துகிலால் துடைத்தும் எங்கே போறீர்

7. பாவங்கள் ஒன்றாய் சேர்ந்த, பாரச் சுமையினாலே
மீண்டும் தரையில் வீழ்ந்தும் வீரத்துடன் எழுந்து எங்கே போறீர்

8. புண்ணிய ஸ்தீரிகள் பலர், புலம்பி அழும் வேளை
ஆறுதல் கூறி நீரும், நேசக்கண்ணீர் சொரிந்து எங்கே போறீர்

9. சிலுவை பாரத்தாலே, மாமரி ஏகமைந்தன்
மூன்றாம் முறை தரையில், முகம் படிந்தெழுந்தும் எங்கே போறீர்

10 நீடாடை கழற்றவே, கோடாகோடிக் காயங்கள்
இரத்தம் ஆறாய் பெருகி, வேதனையால் வருந்தி எங்கே போகிறீர்

11 நீட்டிய கால் கரத்தில், நீண்ட இரும்பாணிகள்
நிஷ்ட யூதர் அறைந்தும், நேசத்திலே வெந்து பலி-யாகினீர்

12 சிலுவை பீடமேறி, மும்மணி நேரந் தொங்கி
அரிய பிதாவை வேண்டி, ஆருயிர் ஒப்படைத்து பலி-யாகினீர்

13 மரி தாய் மடிமீதில், மரித்த மகன் தாங்கி
ஏழு சோக வாட்களால், ஊடுருவி வருந்தி தாயே நின்றீர்

14 கர்த்தரின் உடல்தனை, கல்லறைக்குள் அடக்கி
உத்தானம் ஜீவனுமாய், உயிருடன் எழுந்து எப்போ வருவீர்

15 கல்லறைக்குள் அடங்கா, இறைவனின் மைந்தனே,
உத்தானம் ஜீவனுமாய், உயிருடன் எழுந்து காட்சி தந்தீர்.

# சிலுவை பாதை




தந்தை மகன் ஆவியென தனித்துவமா யிருத்து
திருத்துவத்தின் மகிமைதனை கருத்தாக நாமறிய
கருணையுள நாதன் காருண்ய மூர்த்தியிடம்
கதிமோட்சம் நாம்பெறவே அதிபக்தி சிரத்தையுடன்
துதிசெய்ய வேண்டியிப்போ தொழுதிட
முனைந்திடுவோம்

தச்சன் மகனாக தரத்திலே உயர்வாக
மாண்புடைய மைந்தனாய் மாசற்ற நிலையாக
ஆவியின் அற்புதத்தால் பாவிகளை மாற்றிடவே
புவியிலே பிறந்திட்டார் புனிதராய் இருந்திட்டார்
குருடரை காணவைத்தார் முடவரை நடக்க வைத்தார்
ஆலய கூடத்தை வாணிக தளமாக்கி
ஆணவம் செய்தாரை அங்கிருந்து விரட்டிவிட்டார்.
குற்றமதை கண்டாலே சீற்றமும் கொண்டாரே
நேசமுள்ள மாந்தரிடம் பாசமழை பெய்தாரே
மணவிழா பந்திக்கு மகத்தான விருந்தளித்தார்
அழுதாரை தேற்றி ஆறுதலும் தந்திட்டார்
தொழுதாரை போற்றி துணையாக ஆனாரே
தாய்க்கு மகனாம தாரணியில் வாழ்ந்தாரே.

இப்புவி மாந்தருக்கு ஒப்பாகவே பிறந்து
வாழும் வகைதன்னை வளமாக காட்டிவைத்தார்
எப்போதும் அதன்பலனை எல்லாரும் தானடைந்து
ஏகசுதன் தாள்பணிந்து இன்புற்று வாழ்ந்திடவே
அன்புசெய்யும் முறையாக அறியவும் வைத்திட்டார்.
வல்லவனே உன்பாதம் வணங்கிடுவோம் வாஞ்சையுடன்
உன்னருள் தரவேண்டி உளமார வேண்டுகிறோம்.




திவ்ய யேசுவே உம்மை ஆராதித்து வணங்கி
உமக்கு நன்றியறிந்த தோஸ்திரம் செய்கிறோம்
அதேனென்றால் உமது அர்ச் சிலுவை கொண்டு
உலகத்தை மீட்டு இரட்சித்தீர்

## முதல் ஸ்தலம்

இயேசு தீர்ப்பு இடப்படுகிறார்.

பாவம் புரிந்திட்ட பாவைக்கு தண்டனையை
கோபமுள்ள கூட்டத்தார் கூட்டிவந்து கேட்டார்கள்
தீர்ப்பிட மாட்டேனென திகைப்புற வைத்திட்டார்
திருந்திவாழ வேண்டுமென அறிந்திடவும் வைத்திட்டார்
கொடுஞ்சிலுவை சுமத்திடவே கூட்டத்தார் முற்பட்டார்
தீர்ப்பிடா உனக்கதை தீர்ப்பாக வைத்தார்கள்
எம்பாவ சுமைதன்னை கணக்கிலே கொள்ளாமல்
கருணையால் எமைநீரே காத்திட வேண்டுமென
தீர்ப்பிடும் நாளையெண்ணி திகைத்து நிற்கின்றோம்
காத்திட வேண்டுமென கண்கலங்கி வேண்டுகிறோம்
துதிசெயும் எமக்கு கதிமோட்சம் தருவாயே!

எம்பாவ சுமையெல்லாம் உமைவந்து வாட்டியதால்
கல்வாரி சிலுவையாய் கடுந்துயராய் மாறியதே
உனதரிய நன்மைகளை ஒருசிறிதும் நினையாமல்
உன்மத்த னாயிருந்து உதவாக்கரை யானேன்
எம்பாவம் போக்கி எமக்கருள் புரிகவென
இப்போதும் இறைஞ்சுகிறோம் ஏசுவே எமைக்காப்பாய்!

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி தயவாயிரும் x2
விசுவாசிகளுடைய ஆத்துமங்கள் சர்வேசுரனுடைய
இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில்
இளைபாறக்கடவது ஆமென்.

திவ்ய யேசுவே உம்மை ஆராதித்து வணங்கி
உமக்கு நன்றியறிந்த தோஸ்திரம் செய்கிறோம்
அதேனென்றால் உமது அர்ச் சிலுவை கொண்டு
உலகத்தை மீட்டு இரட்சித்தீர்




## இரண்டாம் ஸ்தலம்

இயேசுவின் தோள்மேல் சிலுவையை
சுமத்துகிறார்கள்.

திருந்தாத கூட்டத்தில் மருந்துக்கும் ஆளில்லை
தீர்ப்பு கூறியவர் தான் தப்பிக்கவழியின்றி
அப்பாவம் எப்போதும் தனைச்சேர வேண்டாமென
அப்போதே கைகழுவி இயேசுவை ஒப்புவித்தார்
இரக்கமில்லா கூட்டத்தார் அப்போதே அவர்தோளில்
அளவில்லா பாரமுள்ள சிலுவையினை வைத்திட்டார்
சுமையாலே சோர்ந்திட்டால் இளைப்பாற அப்போதே
எமைநாடி வந்து ஏக்கத்தை போக்கிடுவீர்
என்றெமக்கு அன்றே இதமாக போதித்தீர்
பாரச் சிலுவையின் பாதைகள் ஏராளம்
அதைச்சுமக்க முடியாமல் அல்லலுற நேர்ந்ததுவே
அதைப்பார்த்த கூட்டத்தார் வகையிலா ஆனந்தம்
கொண்டாரே கூடி ஆடி மகிழ்ந்தாரே

என்றென்றும் இன்னருளை ஏகமாய் கொடுத்திட்டாய்
உண்டென்ற உன்னருளை உளமார யாசிக்கின்றோம்
ஈடில்லா உன்கொடைகள் கேடில்லா செல்வமாகும்
மாண்புடைய உமதன்பை மட்டற்று வழங்கிடுவாய்
மன்னவனே நீவாழி! மாபரனே எமைக்காப்பாய்.

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி தயவாயிரும் x2
விசுவாசிகளுடைய ஆத்துமங்கள் சர்வேசுரனுடைய
இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில்
இளைபாறக்கடவது ஆமென்.

திவ்ய யேசுவே உம்மை ஆராதித்து வணங்கி
உமக்கு நன்றியறிந்த தோஸ்திரம் செய்கிறோம்
அதேனென்றால் உமது அர்ச் சிலுவை கொண்டு
உலகத்தை மீட்டு இரட்சித்தீர்




## மூன்றாம் ஸ்தலம்

இயேசு முதன்முறை கீழே விழுகிறார்.

பாவிகள் நிறைந்த கூட்டம்
பாதையோ மேடு பள்ளம்
பளுவுள்ள பார சிலுவை
பழக்கமில்லா கொடும் பயணம்
மிரட்டல் பேச்சு முரடர்களின் கசையடி
எல்லாமே அவரை ஏகமாய் வாட்டியது
இதையெல்லாம் உணர்ந்தும் ஏதும்செய்ய வழியின்றி
தந்தையின் விருப்பமென சிந்தையிலே கொண்டிட்டார்
களைப்புற்ற வேளை கால்கள் தள்ளாட
இனியொரு தப்படி வைத்திட இயலாமல்
தனிமரம் வீழ்ந்த தகையவாய் வீழ்ந்திட்டார்
வீழ்ந்தவரை தூக்கிவிட வேதனையை குறைவுபட
சூழ்ந்துள்ள கூட்டத்தார் சிறிதேனும் முயலவில்லை
இருந்தாலும் மெதுவாக எழுந்திருந்து மீதியுள்ள
தூரத்தை கடந்துசெல்ல ஆயத்தம் ஆனாரே.

எம்பாவ சுமையெல்லாம் உமைவந்து வாட்டியதால்
கல்வாரி சிலுவையாய் கடுந்துயராய் மாறியதே
உனதரிய நன்மைகளை ஒருசிறிதும் நினையாமல்
உன்மத்த னாயிருந்து உதவாக்கரை யானேன்
எம்பாவம் போக்கி எமக்கருள் புரிகவென
இப்போதும் இறைஞ்சுகிறோம் ஏசுவே எமைக்காப்பாய்!

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி தயவாயிரும் x2
விசுவாசிகளுடைய ஆத்துமங்கள் சர்வேசுரனுடைய
இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில்
இளைபாறக்கடவது ஆமென்.




திவ்ய யேசுவே உம்மை ஆராதித்து வணங்கி
உமக்கு நன்றியறிந்த தோஸ்திரம் செய்கிறோம்
அதேனென்றால் உமது அர்ச் சிலுவை கொண்டு
உலகத்தை மீட்டு இரட்சித்தீர்

## நான்காம் ஸ்தலம்

### தாய் மரியாளை தன்முன்னே காண்கின்றார்

கொடிய மனங்கொண்ட கூட்டத்தார் கைப்பிடியில்
அகப்பட்ட மான்போல அல்லலுறும் மகன்தன்னை
சுமந்துவரும் சிலுவையுடன் கண்ணீரும் கசிந்துருக
கண்டிட்டார் தன்மகனை தாயான மரியன்னை
சொல்லொணா வேதனைகள் கல்லாக மனத்திடனை
முள்ளாகக் குத்தி தள்ளாட வைத்ததுவே
அதுகண்ட அருமைமகன் அணல்வீழ்ந்த புழுவானார்
மதுவுண்ட வண்டாக மயக்கமுறும் நிலையானார்
தாய்மகன் வேதனைக்கு தரணியோர் என்றென்றும்
தப்பியது இல்லையென நிச்சயமாய் அன்றைக்கே
நிலைத்திடும் உண்மையாய் நமக்கதனை உணர்த்திட்டார்

மண்டியிட்டு வேண்டுகிறோம் மாபரனே எமைக்காப்பாய்
அண்டிவந்த எமைக்காத்து ஆதரவு நல்கிடுவாய்
நாடும்நல் மனத்தாலே நாயகனே உனைப்போற்றி
வாடும் எமை தேற்றிடுவாய் வல்லவனே நீவாழி!
பாடும் பறவைக்கும் பகலவனாய் நீயிருந்தாய்
தேடும் எமை தேற்றி தீங்கினை போக்கிடுவாய்

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி தயவாயிரும் x2
விசுவாசிகளுடைய ஆத்துமங்கள் சர்வேசுரனுடைய
இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில்
இளைபாறக்கடவது ஆமென்.

திவ்ய யேசுவே உம்மை ஆராதித்து வணங்கி
உமக்கு நன்றியறிந்த தோஸ்திரம் செய்கிறோம்
அதேனென்றால் உமது அர்ச் சிலுவை கொண்டு
உலகத்தை மீட்டு இரட்சித்தீர்




## ஐந்தாம் ஸ்தலம்

சிலுவை சுமக்க உதவுகிறார் ஒருவர்.

தள்ளாட்டம் தலைக்கேறி தடுமாறிப் போனார்
விழுந்தவர் எழுந்து தளர்நடை கொண்டார்
பாரச் சிலுவை பாடாய் படுத்தியதால்
அழுத்தும் சுமையால் அவதிக்கு ஆளானார்
இதையெல்லாம் கண்டவர்கள் பதைபதைப்பு கொள்ளாமல்
கதைபல கூறி களிப்புற்று வந்தார்கள்
ஏளனம் பேசி ஏவிடியம் செய்தார்கள்
அத்தகு வேளையில் அருமையுள்ள நன்மனத்தான்
அவருக்கு உதவிட அன்பாக முன்வந்தார்
அவரது உதவியினால் அடுத்துள்ள தூரத்தை
அமைதியாய் கடந்திட ஆயத்தம் ஆனாரே.

என்றென்றும் இன்னருளை ஏகமாய் கொடுத்திட்டாய்
உண்டென்ற உன்னருளை உளமார யாசிக்கின்றோம்
ஈடில்லா உன்கொடைகள் கேடில்லா செல்வமாகும்
மாண்புடைய உமதன்பை மட்டற்று வழங்கிடுவாய்
மன்னவனே நீவாழி! மாபரனே எமைக்காப்பாய்.

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி தயவாயிரும் x2
விசுவாசிகளுடைய ஆத்துமங்கள் சர்வேசுரனுடைய
இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில்
இளைபாறக்கடவது ஆமென்.




திவ்ய யேசுவே உம்மை ஆராதித்து வணங்கி
உமக்கு நன்றியறிந்த தோஸ்திரம் செய்கிறோம்
அதேனென்றால் உமது அர்ச் சிலுவை கொண்டு
உலகத்தை மீட்டு இரட்சித்தீர்

## ஆறாம் ஸ்தலம்

மாதொருத்தி முகம் துடைத்தாள்.

இளைப்பாற வழியின்றி களைப்புற்ற மேனியுடன்
சிலுவைதனை தோள்சுமந்து செல்லும் வழியெல்லாம்
சிரமத்துக் காளானார் சேசுவெனும் சீராளன்
அயர்வுற்ற அவர்மேனி அதிகமாய் சோர்ந்ததுவே
வியர்வை முகமெல்லாம் வழிந்து நனைத்ததனால்
காண்போர் கவலையுறும் காட்சியாய் இருந்ததங்கே
உருண்டோடும் வியர்வைதனை துடைக்கவும் வழியில்லை
இதைக்கண்ட பெண்ணொருத்தி எடுத்துவந்தாள் ஓர்துணியை
அந்ததுணி கொண்டு அவர்முகத்தை அவள்துடைத்தாள்
அத்தகு அருமைதனை அவணியோர் அறிவதற்கு
அவர்முகத்தை அழியாமல் அதில்பதித்தார் அன்புடனே
இறைமகன் என்பதற்கு இதுவும்ஓர் அடையாளம்
இரக்கமுள்ள இயேசுவானார் இதிலென்ன சந்தேகம்

பிறர்உதவி பெறவல்ல நாம்பெற்ற இப்பிறவி
பிறர்க்குதவி செய்யவே பிள்ளையாய் பிறந்திட்டோம்
பிறர்படும் துன்பத்தை காலத்தே நீக்கினால்
அகிலத்தில் ஆனந்தம் அற்புதமாய் நிலவிடும்
தீதினை புரிந்தார்க்கும் தாமதம் கொள்ளாமல்
நன்மை புரிந்தால்தான் நாம்உயர்வு பெற்றிடலாம்
இதையெல்லாம் நமக்கு இதமாகச் சொல்லி
இனியவழி காட்டிய யேசுவை போற்றிடுவோம்!

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி தயவாயிரும் x2
விசுவாசிகளுடைய ஆத்துமங்கள் சர்வேசுரனுடைய
இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில்
இளைபாறக்கடவது ஆமென்.

திவ்ய யேசுவே உம்மை ஆராதித்து வணங்கி
உமக்கு நன்றியறிந்த தோஸ்திரம் செய்கிறோம்
அதேனென்றால் உமது அர்ச் சிலுவை கொண்டு
உலகத்தை மீட்டு இரட்சித்தீர்




## ஏழாம் ஸ்தலம்

யேசு இரண்டாம் முறை கீழே விழுகிறார்.

மனித பிறவியேற்று மானிடர் உணர்வுகொண்டு
மறுபடியும் வீழ்ந்து உருக்குழைந்து போனார்
இத்தகு இன்னலெல்லாம் ஏற்பதுதான் இயல்புஎன
இதமாக எடுத்துரைத்தார் பதமான வழியினிலே
நமக்கெல்லாம் இதுபாடம் நன்றாக புரிந்திடனும்
அடுத்தடுத்து வீழ்ந்துபடும் அவதிகளை பெற்றாலும்
தடுத்தாளும் மனங்கொண்டு தளராமல் இருந்திடனும்
நாயகன் இயேசுவுக்கே நடப்பது இதுவென்றால்
நாமெல்லாம் இப்புவியில் தூசிக்கு சமமாவோம்
என்றென்றும் இயேசுபிரான் நமக்குதவ மாட்டாரா?
கர்த்தரின் அருள்நம்மை கனிவாக வழிநடுத்தும்
கருணையின் நாயகன் கண்திறந்து பார்த்திடுவார்
கட்டாயம் இருள்விலகும் களிப்படையச் செய்திடுவார்
கலங்கிமனம் சோராமல் காலமெல்லாம் ஜெபித்து
கர்த்தர் வழிநடந்தால் காணிக்கை அவர்தருவார்

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி தயவாயிரும் x2
விசுவாசிகளுடைய ஆத்துமங்கள் சர்வேசுரனுடைய
இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில்
இளைபாறக்கடவது ஆமென்.

திவ்ய யேசுவே உம்மை ஆராதித்து வணங்கி
உமக்கு நன்றியறிந்த தோஸ்திரம் செய்கிறோம்
அதேனென்றால் உமது அர்ச் சிலுவை கொண்டு
உலகத்தை மீட்டு இரட்சித்தீர்




## எட்டாம் ஸ்தலம்

அழுதுவரும் பெண்களுக்கு ஆறுதல் கூறுகின்றார்.

இத்தகு இன்னலெல்லாம் எசுபிரான் அடைந்தாலும்
தளர்ந்த உடம்பாலே தடுமாறி வீழ்ந்தாலும்
தந்தையின் சித்தமதை தலையானதாய் எண்ணி
பந்தாடும் கூட்டத்தில் பாலகனைப் போலானார்
முன்னுள்ள பாதையை முடித்திடும் நோக்கத்தில்
தானாக மேற்கொண்டு தவறா மல்நடந்தார்
அப்போது அவர்பின்னே அழுதிடும் பெண்கள்சிலர்
ஏசுவின் நிலைகண்டு இரக்கமாய் வருந்தினரே
எனக்காக அழவேண்டாம் ஏக்கத்தை தவிர்த்திடுவீர்
என்றந்த பெண்களுக்கு எளிமையாய் சொல்லிவந்தார்
அல்லல் படுவோர்க்கு ஆறுதலை நாம்வழங்க
அவசியம் வேண்டுமென அன்றே கூறிட்டார்
அன்பான அவர்கருத்தை அனைவரும் பின்பற்றி
ஆண்டவனின் தீர்ப்பாக அதைநாமும் ஏற்றிடலாம்
துன்பம் கொண்டவர்க்கு இன்பம் ஏற்படவே
ஆறுதலைநாம் கொடுத்தால் அதுதானே பேரின்பம்

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி தயவாயிரும் x2
விசுவாசிகளுடைய ஆத்துமங்கள் சர்வேசுரனுடைய
இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில்
இளைபாறக்கடவது ஆமென்.

திவ்ய யேசுவே உம்மை ஆராதித்து வணங்கி
உமக்கு நன்றியறிந்த தோஸ்திரம் செய்கிறோம்
அதேனென்றால் உமது அர்ச் சிலுவை கொண்டு
உலகத்தை மீட்டு இரட்சித்தீர்




## ஒன்பதாம் ஸ்தலம்

மூன்றாம் முறையாக கீழே விழுகிறார்.

உலகினை உயர்விக்க உண்மைகளை உரைத்தமகன்
பளுவான சிலுவைதனை பாதகர்கள் சேர்ந்துவர
ஒருவிதமாய் அப்போது கொல்கத்தா மலையுச்சி
மேல்முகடு போய்சேர்ந்தார் களைப்புற்ற நிலைமையுடன்
இனியவரால் ஓரடியும் எடுத்துவைக்க இயலாமல்
பட்டமரம் சாய்ந்தது போல் கிடையாக வீழ்ந்திட்டார்
இம்முறை வீழ்ந்து எழுந்திருக்க இயலாமல்
இன்னல்பல கொண்டு ஏகமாய் துடித்திட்டார்
அதுகண்ட ஆணவத்தார் அப்போதும் அடித்தடித்து
அவருடம்பை ரணமாக ஆக்கியே மகிழ்ந்தார்கள்
இன்னா செய்தார்க்கும் இனியதையே செய்திட்ட
ஏசுபிராண் அப்போதும் ஏதும்செய்யா திருந்தார்

எம்பாவ சுமையெல்லாம் உமைவந்து வாட்டியதால்
கல்வாரி சிலுவையாய் கடுந்துயராய் மாறியதே
உனதரிய நன்மைகளை ஒருசிறிதும் நினையாமல்
உன்மத்த னாயிருந்து உதவாக்கரை யானேன்
எம்பாவம் போக்கி எமக்கருள் புரிகவென
இப்போதும் இறைஞ்சுகிறோம் ஏசுவே எமைக்காப்பாய்!

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி தயவாயிரும் x2
விசுவாசிகளுடைய ஆத்துமங்கள் சர்வேசுரனுடைய
இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில்
இளைபாறக்கடவது அமென்.




திவ்ய யேசுவே உம்மை ஆராதித்து வணங்கி
உமக்கு நன்றியறிந்த தோஸ்திரம் செய்கிறோம்
அதேனென்றால் உமது அர்ச் சிலுவை கொண்டு
உலகத்தை மீட்டு இரட்சித்தீர்

## பத்தாம் ஸ்தலம்

இயேசுவின் ஆடைகளை உரிகிறார்கள்.

இன்னல் பலயேற்று சோகத்தால் உடல்தளர்ந்து
துவண்டிட்ட வேளையில் துச்சமாய் பார்த்தார்கள்
வாடிடும் உடல்முழுதும் வழிந்ததே இரத்தமெல்லாம்
வியர்வையும் தன்பங்காய் உடலினை நணைத்ததுவே
அப்போது அவருடைகள் காயத்தின் மேலே
காய்ந்து பதிந்து உலர்ந்து இருந்ததுவே
அதுகண்ட அற்பர்கள் அதையும் விடக்கூடாதென
அனைத்து உடைகளையும் ஆணவமாய் இழுத்தார்கள்
பற்றியிருந்த அவருடைகள் பலபடியாய் கிழிந்து
இழுத்தவர் கைகளில் சீரழிந்து சேர்ந்ததுவே
அப்போது அவர்மேனி அணல்வீழ்ந்த புழுவாக
சொல்லொண்ணா வேதனையால் துடித்து அடங்கியது

பிறர் துன்பம் போக்கிட்ட பெருமானே
நீபட்ட துன்பம் எத்துணை கொடுமை
அத்தனை துன்பங்களை எமக்காக ஏற்றிட்டாய்
இதையெல்லாம் இவ்வுலகம் இனியேனும் நிச்சயமாய்
எப்படியும் எண்ணி உன்னருள் பெற்றுவிடும்.

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி தயவாயிரும் x2
விசுவாசிகளுடைய ஆத்துமங்கள் சர்வேசுரனுடைய
இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில்
இளைபாறக்கடவது ஆமென்.

திவ்ய யேசுவே உம்மை ஆராதித்து வணங்கி
உமக்கு நன்றியறிந்த தோஸ்திரம் செய்கிறோம்
அதேனென்றால் உமது அர்ச் சிலுவை கொண்டு
உலகத்தை மீட்டு இரட்சித்தீர்




## பதினோராம் ஸ்தலம்

### இயேசுவை சிலுவையில் அறைகிறார்கள்.

ஆடைகள் உறியப்பட்டும் அவதிகளால் மேம்பட்டும்
துடிதுடித்த வேளையிலும் துன்புறுத்தும் கூட்டத்தார்
தணியாத கோபத்தால் தூக்கிவந்த சிலுவைமேல்
துச்சமாய் அவருடம்பை தூக்கியே வைத்தார்கள்
சாய்த்து ஆணியிட சண்டாளர் முடிவெடுத்தார்
இருபக்கம் கைவிரித்து இரும்பாணி துணைகொண்டு
காலிரண்டை தொங்கவிட்டு கருப்பாணி தான்கொண்டு
இரக்கமில்லா குணத்தாலே இரத்தம்வர அடித்தார்கள்
சுத்தியலின் துணையாலே சத்தமாய் அடித்தார்கள்
அப்போது ஆண்டவர் அனுபவித்த வேதனையை
அங்கிருந்த கூட்டத்தார் ஆசையாய் பார்த்திட்டார்
அரக்கத் தனமாக அகமகிழ்ந்து போனார்கள்

பிறர்துன்பம் காண்பவர்கள் மறவாது உதவிடனும்
மாறாக இவர்களெல்லாம் ஆறாத் துயர்தந்தார்
பிறர்துன்பம் பொறுக்காத பெருந்தகை நீஎன்று
அறியாத கூட்டத்தார் ஆணியால் அடித்தார்கள்
மூன்றாணி பலத்தால் மூர்க்கர்தம் நடுவினிலே
மூவருடன் ஒருவராய் ஆகும்நிலை பெற்றாயே
இதையெல்லாம் இவ்வுலகம் என்றாவ தொருநாள்
எப்படியும் புரிந்துகொள்ளும் இயேசுவே நீவாழி!

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி தயவாயிரும் x2
விசுவாசிகளுடைய ஆத்துமங்கள் சர்வேசுரனுடைய
இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில்
இளைபாறக்கடவது ஆமென்.

திவ்ய யேசுவே உம்மை ஆராதித்து வணங்கி
உமக்கு நன்றியறிந்த தோஸ்திரம் செய்கிறோம்
அதேனென்றால் உமது அர்ச் சிலுவை கொண்டு
உலகத்தை மீட்டு இரட்சித்தீர்




## பன்னிரண்டாம் ஸ்தலம்

இயேசு சிலுவையில் உயிர் விடுகிறார்.

மூவராய் இருந்தாலும் மேன்மையில் ஒருவரானார்
மூவுலகை படைத்திட்ட முடிசூடா மன்னவனை
சீற்றம் கொண்டவர்கள் சிலுவையில் அறைந்திட்டார்
மூர்க்கத் தனத்தாலே முள்முடியை சூட்டினரே
தாகமாய் உள்ளதென வாய்திறந்து கேட்டதற்கு
கசப்பான காடிதனை குடிக்க கொடுத்தார்கள்
மூன்றாணி பலத்தாலே முகம்சாய்த்து தொங்குகிறார்
மூச்சடைக்கும் வேளையிலும் பேச்சின்றி தானிருந்தார்
எஞ்சியுள்ள நேரத்தில் நெஞ்சத்தில் எண்ணமிட்டார்
அன்பான எம்தந்தாய் அறியாமல் இவர்செய்யும்
செயல்களை எனக்காக பொறுத்தருள வேண்டுமென்றும்
பிதாவே ஏன் என்னை கைவிட்டீர் என்றும்
கலங்கி மனம்சோர்ந்து கண்ணியமாய் கேட்டு
கண்களை மூடி கடவுளிடம் போய்சேர்ந்தார்

உலகினை படைத்து ஒப்புயர் வாக்க
உகந்ததை செய்தார் உத்தமன் இயேசு
உயிரையும் ஈந்து உயர்ந்தவர் ஆனார்
தந்தை தனக்கிட்ட கட்டளை இதுவென
சிந்தை மறவாது செய்தும் முடித்திட்டார்
என்றும் அவர்பாதம் சென்றடைய நாமும்
நன்றே ஜெபித்து நாளும் வணங்கிடுவோம்

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி தயவாயிரும் x2
விசுவாசிகளுடைய ஆத்துமங்கள் சர்வேசுரனுடைய
இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில்
இளைபாறக்கடவது      அமென்.

திவ்ய யேசுவே உம்மை ஆராதித்து வணங்கி
உமக்கு நன்றியறிந்த தோஸ்திரம் செய்கிறோம்
அதேனென்றால் உமது அர்ச் சிலுவை கொண்டு
உலகத்தை மீட்டு இரட்சித்தீர்




## **<u>பதின்மூன்றாம் ஸ்தலம்</u>**

<u>இறந்த மகனை மாதாவின் மடியில் கிடத்துகிறார்கள்.</u>

எண்ணில்லா அற்புதங்கள் ஈடில்லா அருஞ்செயல்கள்
செய்திட்ட சேய்தன்னை பெற்றிட்ட தாயாக
அவணியோர் கண்டாலும் அதையெல்லாம் தன்மனத்தே
ஆய்ந்து பார்த்து அமைதியாய் தானிருந்தார்
செய்திட்ட செயலையெல்லாம் சிறிதேனும் என்னாமல்
சிலுவையில் அறைந்து உயிரையே மாய்த்தார்கள்
மரித்த மகனை மடிமீது தான்வைத்து
தவித்த நிலையால் தடுமாற்றம் மிகவடைந்து
சொரியும் கண்ணீரால் சோர்வுற்றுப் போனார்
புதுமைபல புரிந்திட்ட பொற்புடைய பூபாலன்
பதுமையாய் தன்மடியில் சடலமாய் இருப்பதையெண்ணி
சால்புடைய தாயாரும் வாய்விட்டு கூறாமல்
மேதினியோர் பலன்பெறவே மௌனமாய் இருந்தாரே
என்றென்றும் அவர் நாமம் இப்புவியில் தானிருந்து
நமக்கெல்லாம் நல்லாசீர் தவறாமல் நல்கிடுமே
நன்றென்ற அவர்கருத்தை நாளும் எண்ணிவந்தால்
நிச்சயம் நாமும் நல்வழி சேர்ந்திடலாம்

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி தயவாயிரும் x2
விசுவாசிகளுடைய ஆத்துமங்கள் சர்வேசுரனுடைய
இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில்
இளைபாறக்கடவது ஆமென்.

திவ்ய யேசுவே உம்மை ஆராதித்து வணங்கி
உமக்கு நன்றியறிந்த தோஸ்திரம் செய்கிறோம்
அதேனென்றால் உமது அர்ச் சிலுவை கொண்டு
உலகத்தை மீட்டு இரட்சித்தீர்




## <u>பதினான்காம் ஸ்தலம்</u>

<u>இயேசுவை கல்லறையில் அடக்கம் செய்கிறார்கள்.</u>

பாருலக மாந்தரெல்லாம் சீருடைய வாழ்வுபெற்று
சிறந்தோங்கி ஓர்குலமாய் மேதினியில் வாழ்வித்தார்
அதையெண்ணா பேதையர்கள் வதைகளை அவர்க்கீந்து
வாழ்வினை முடித்துவைத்து தாழ்வினை ஏற்றார்கள்
தாயார் மடியிருந்த சேசுவின் திருவுடலை
ஆழமாய் குழிதோண்டி அங்கேயே புதைத்திட்டார்
ஆனமட்டும் பத்திரமாய் அவருடலை மூடனரே
எவருமதை எடுத்திடாமல் எச்சரிக்கை யாயிருந்தார்
பெரும்பாறை ஒன்றையும் மேல்வைத்து மூடினார்கள்
காவலுக்கும் ஆள்வைத்து கண்கானித்து வந்தார்கள்
எல்லாம் முடிந்ததென சந்தோஷம் கொண்டார்கள்
உலகத்தார் உயர்வடைய பலவிதத்தில் பாடுபட்டார்
உயிரையும் ஈந்து ஓய்வாக ஆனாரே
இறந்த லாசருக்கு இன்னுயிரை தந்தவர்தான்
பிறந்த மண்ணின்று பிதாவிடம் போய்சேர்ந்தார்
பரந்த உலகை படைத்திட்ட பரமனவன்
தனக்கென்ற கல்லறையும் தனியாக இல்லாமல்
நினைக்கின்ற பேராக நித்திரையில் ஆழ்ந்திட்டார்
காசுபணம் என்று கதியாக கிடக்காமல்
சேசுவை நாம் தெய்வமாய் கொண்டிட்டால்
வீசும் புயல்கூட மோசமாய் போகாமல்
பாச தென்றலாய் பரமன்அதை செய்திடுவார்
ஆண்டவனின் அருங்கொடைகள் அனைத்தையும் பெறுவதற்கு
அயராது வேண்டி அனுதினமும் ஜெபித்திடனும்.

எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி தயவாயிரும் x2
விசுவாசிகளுடைய ஆத்துமங்கள் சர்வேசுரனுடைய
இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில்
இளைபாறக்கடவது ஆமென்.

## வேண்டுவோம்




பெற்றோர் பெருமைபெற மற்றவர் நலமடைய
மாசற்ற தாய்மரிக்கு சேசுவெனும் சேயாக
மேதினியில் பிறந்து மேன்மையுடன் வாழ்ந்து
போதனை மட்டுமின்றி சாதனை பலபுரிந்து
பூவுலக மாந்தர்க்கு மேவும்வழி காட்டிவந்தார்.
இதையேற்க இயலாமல் பாதக மனமுடையார்
வீண்பழி சுமத்தி வேதனைகள் கொடுத்திட்டார்
மாய்மாலம் செய்வதாய் வாய்ஜாலம் பேசி
காயங்கள் செய்து காரணங்கள் கூறினரே
என்றாலும் எப்போதும் எல்லார்க்கும் நல்லதையே
நன்றாக செய்து குன்றின்மேல் விளக்கானார்.
மலைமீது அவர்பேச்சை கேட்கவந்த மக்களுக்கு
விலையேதும் கூறாமல் வயிராற உணவளித்தார்
தீராத நோய்களை தீர்த்தும் வைத்திட்டார்
மணவிழா மன்றத்தில் மக்கள் மகிழ்ந்திருக்க
மகத்தான மதுவாக குடிநீரை மாற்றிவைத்தார்
தீய ஆவியால் துன்புற்ற ஆடவனை
தூயவனாய் மாற்றி வாழும்வகை செய்திட்டார்
உலகினை உய்விக்க உகந்தவழி காட்டிவந்தார்
இத்தகு வழியிலெல்லாம் இவ்வுலகில் செய்தவரை
இடும்பை செய்வதற்கே இருந்தார்கள் சிலபேர்
ஏற்புடைய நற்செயலை ஏற்கவில்லை என்றாலும்
நல்லதையே செய்திட்டார் நாயகனாம் நம்மேசு
சீரிய உன்னதங்கள் செய்திட்ட சீராளன்
நமக்கருள் செய்திடுவான் நாமுமதை பெற்றிடலாம்
மனமயக்கம் கொள்ளாமல் தினமவரை வணங்கிடுவோம்
என்றுமவர் துணையுண்டு இணைந்துமன் றாடிடுவோம்
வேண்டும்பலன் தந்திடுவார் விரும்பியதை பெற்றிடலாம்
ஐயமெலாம் ஏதுமின்றி அவர்தருவார் நிச்சயமாய்
அமைதியாய் அவரிடத்தில் அனைத்தையும் ஒப்படைத்து
சுமைநீங்கி சென்றிடலாம் சுகம்பெற்று வாழ்ந்திடலாம்
எல்லாமே நமக்கு யேசுவே என்றிருந்தால்
வல்லவன் திருப்பாதம் நல்வழி காட்டிவிடும்
போய்வரலாம் நம்வீடு புகழ்பெறுமே அவர்திருபாடு.

எங்கே சுமந்து போறீர்?  சிலுவையை நீர் எங்கே சுமந்து போறீர்
பொங்கும் பகைவராலே, அங்கம் நடு நடுங்க எங்கே போறீர்

1. மனித பாவத்தாலே, மரணத்தீர்வை பெற்று
தூய செம்மறிபோலே, துக்கத்துடன் வருந்தி எங்கே போறீர்

2. பாரச்சிலுவை மரம், பாவத்தின் சுமை தாங்கி
பாசத்துடன் அணைத்து, பாரத்துடன் நடந்து எங்கே போறீர்

3. கல்வாரி மலை நாடி, தள்ளாடி தரை வீழ்ந்து
எல்லோரின் பாவங்களை, தனிமையால் சுமந்து எங்கே போறீர்

4. மாமரி கன்னி அன்னை, மகனின் கோலங்கண்டு
மாதுயருடன் வாடி, மனம் நொந்து வருந்த எங்கே போறீர்

5. உதிரம் ஆறாய் சிந்தி, உள்ள உரமிழந்து
சீரேன் சீமோன் துணையை, ஏற்று வழி நடந்து எங்கே போறீர்

6. கர்த்தரே உம் வதனம், இரத்தக் கறையால் மங்கி
உத்தமி வெராணிக்காள், வெண் துகிலால் துடைத்தும்  எங்கே போறீர்

7. பாவங்கள் ஒன்றாய் சேர்ந்த, பாரச் சுமையினாலே
மீண்டும் தரையில் வீழ்ந்தும் வீரத்துடன் எழுந்து எங்கே போறீர்

8. புண்ணிய ஸ்தீரிகள் பலர், புலம்பி அழும் வேளை
ஆறுதல் கூறி நீரும், நேசக்கண்ணீர் சொரிந்து  எங்கே போறீர்

9. சிலுவை பாரத்தாலே, மாமரி ஏகமைந்தன்
மூன்றாம் முறை தரையில், முகம் படிந்தெழுந்தும் எங்கே போறீர்

10 நீடாடை கழற்றவே, கோடாகோடிக் காயங்கள்
இரத்தம் ஆறாய் பெருகி, வேதனையால் வருந்தி எங்கே போகிறீர்

11 நீட்டிய கால் கரத்தில், நீண்ட இரும்பாணிகள்
நிஷ்ட யூதர் அறைந்தும், நேசத்திலே வெந்து  பலி-யாகினீர்

12 சிலுவை பீடமேறி, மும்மணி நேரந் தொங்கி
அரிய பிதாவை வேண்டி, ஆருயிர் ஒப்படைத்து பலி-யாகினீர்

13 மரி தாய் மடிமீதில், மரித்த மகன் தாங்கி
ஏழு சோக வாட்களால், ஊடுருவி வருந்தி தாயே நின்றீர்

14 கர்த்தரின் உடல்தனை, கல்லறைக்குள் அடக்கி
உத்தானம் ஜீவனுமாய், உயிருடன் எழுந்து எப்போ வருவீர்

15 கல்லறைக்குள் அடங்கா, இறைவனின் மைந்தனே,
உத்தானம் ஜீவனுமாய், உயிருடன் எழுந்து காட்சி தந்தீர்.




http://www.supuwatha.com/iraivaarthai/siluvaippaathai